**மாண்பமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**முன்னிலை : திரு.M. மாரி, M.S.W., L.L.B.,**

**நீதித்துறை நடுவர், சங்கரன்கோவில்**

Cr.M.P.No. 687/2026

**சங்கரன்கோவில் டவுண் காவல் நிலைய குற்ற எண்.297/26**

**பிரிவுகள் 296(b), 126(2), 351(3), 74 BNS**

உத்தரவு நாள்: 08.06.2026

CNR No. TNTS09-001609-2026

காஜாசெரிப்,
த/பெ. திவான்மைதீன்

... மனுதாரர்/எதிரி

/எதிர்/

காவல் உதவி ஆய்வாளர்,
சங்கரன்கோவில் டவுண் காவல் நிலையம்
குற்ற எண்.297/2026

... எதிர்மனுதாரர்/வாதி

**மனுநாள்: 03.06.2026 மனு 480 BNSS**

இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அரசு தரப்பு பதில் பெறப்பட்டது.

2. மனுதாரர்/எதிரி தரப்பில், மனுதாரர்/எதிரி 28.05.2026 முதல் காவலில் இருந்து வருவதாகவும், அவர் மீது பொய் வழக்கு போடப்பட்டுள்ளதாகவும், அவர் கூலி வேலை செய்து வருபவர் என்றும், அவர் நிரந்த முகவரி உடையவர் என்றும், அவர் நீதிமன்ற நிபந்தனைக்கு கட்டுப்படுவார் என்றும், எதிரியை பிணையில் விடுவிக்கும்பட்சத்தில் தகுந்த பிணையதாரர்களை வழங்குவதாகவும், எனவே மனுதாரர்/எதிரியை பிணையில் விடுவிக்க உத்தரவிட வேண்டுவதாக எடுத்துரைக்கப்பட்டது. எனவே மனுதாரர்/எதிரியை பிணையில் விடுவிக்க உத்தரவிட வேண்டுவதாக எடுத்துரைக்கப்பட்டது.

3. அரசு தரப்பில், சங்கரன்கோவில் நகர் காவல் நிலையம் காவல் நிலைய குற்ற எண். 297/2026 வழக்கானது புலன் விசாரணையில் இருந்து வருவதாலும், மேற்படி வழக்கானது புலன் விசாரணையில் இருந்து வருவதாலும், மேலும், எதிரியை பிணையில் விடும்பட்சத்தில் எதிரி நீதிமன்ற விசாரணைக்கு ஆஜராகாமல் தலைமறைவாகக்கூடும் என்பதாலும், எதிரி மீண்டும் மீண்டும் இதுபோன்ற குற்றச் செயலில் ஈடுபட வாய்ப்புள்ளதாலும், சாட்சிகளை மிரட்டி கலைக்கக்கூடும் என்பதாலும், மேலும், இவ்வழக்கில் குற்றப்பத்திரிக்கை இன்னும் தாக்கல் செய்யாமல் இருப்பதாலும், மேலும், எதிரிக்கு சங்கரன்கோவில் நகர் காவல் நிலைய குற்ற எண்.

229/2018 இ.த.ச. பிரிவுகள் 143, 188, 353 – PT முன்வழக்கு இருப்பதாலும், மேலும், வழக்கின் மற்றொருஎதிரி கைது செய்யப்படாத நிலையில் இருப்பதாலும், மேலும், மற்றொரு எதிரியின் தூண்டுதிடிலன் பேரில் பெண் என்றும் பாராமல் இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளார் என்பதாலும், மேலும், தற்போது பெண்களுக்கு எதிரான குற்றச் செயல் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதாலும், அதனால் பிரச்சனை வருவதற்கு அதிக வாய்ப்பு உள்ளதாலும், மேலும், எதிரியும், வாதியும் ஒரே பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பதாலும், மேற்படி எதிரியை ஜாமீனில் வெளியே விட கடுமையான ஆட்சேபணை தெரிவிப்பதாக எடுத்துரைக்கப்பட்டது.

4. இரு தரப்பும் கேட்கப்பட்டன. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கு ஆவணங்களை பரிசீலிக்கப்பட்டதில், மனுதாரர்/எதிரியானவர் 12 நாட்களாக காவலில் இருந்து வருகிறார் என்று தெரிய வருகிறது. மேலும் இந்த வழக்கு புலன் விசாரணையில் இருப்பதாலும், மேலும், எதிரிக்கு எதிராக ஒரு முன்வழக்கு இருப்பதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதைக் கருத்தில் கொண்டும், மேற்படி குற்றமானது பெண்களை பாதிக்கின்ற குற்றம் என்பதைக் கருத்தில்கொண்டும், வழக்கின் பொருண்மை மற்றும் குற்றத்தின் தீவிரத்தன்மையைக் கருத்தில் கொண்டும், மேற்படி எதிரியை பிணையில் விடுவித்தால் மீண்டும் இதுபோன்ற குற்றச் செயல்களில் ஈடுபடுவார் என்பதைக் கருதியும், வழக்கின் விசாரணைக்கு ஒத்துழைக்காமல் செயல்படுவார் என்பதைக் கருதியும், இந்த மனுதாரருக்கு எதிரான இந்த மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

(ஒம்/–எம்.மாரி
நீதித்துறை நடுவர்,
சங்கரன்கோவில்.